## ரொறன்ரோவின் சமூக வளத் தொடர்புகள் (சீஆர்சீரீ)

மிகக் கூடிய அளவு உளநலப் பிரச்சினைகள் உள்ள 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அவர்கள் சமூகத்தில் மரியாதையுடனும் நிறைவுடனும் வாழ்வதற்கு சீஆர்சீரீ பல வழிகளிலும் உதவுகிறது.

எங்கள் பணிகள் பின்வரும் பெறுமானங்களின்படி வழிப்படுத்தப்படுகின்றன:

மதிப்பு, தெரிவுச் சுதந்திரம், நம்பிக்கை, சுயமாக முடிவெடுத்தல், நுகர்வோர் வழிகாட்டச் செயற்படுதல், இணைந்து செயற்படுதல், வாய்ப்புகளை வழங்குதல், நீதி, நியாயம், நேர்மை, சமத்துவம். உலகின் பல் பண்பாட்டுப் பெறுமதிகளையும் சமூக அநுபவங்களையும் அறிதல், விளங்கி, வளர்த்துக்கொள்தல், ஆகியவற்றில் சீஆர்சீரீ முனைப்பான முயற்சியை மேற்கொள்கிறது. எங்கள் பணிகள் இனத்துவேசத்திற்கும் அடக்கு முறைக்கும் எதிரான வடிவமைப்பைக் கொண்டுள்ளன.

### எங்கள் செயல் திட்டங்கள்

- சமூக ஆதரவுச் சேவைகள் (CSS) (கிழக்கு – மேற்கு)
- குடும்பச் சேவைத் திட்டம்
- சோமாலி, தமிழ்மொழிச் சேவைப் பணியாளர்கள்
- உடல்நல விருத்திச் செயல் திட்டம்
- விடுதி வதிவிட அரவணைப்புச் சேவைத் திட்டம் (HOP) (பெண்களோடு பணிசெய்தல்)
- உளநல நீதிமன்ற உதவி வழங்கும் சேவைகள்

### எங்கள் சேவை

சமூக உதவிச் சேவைகள் என்ற திட்டம் பின்வரும் உதவிகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்குத் துணைபுரிகின்றது:

- உணவு, வதிவிடம், உடை, சுகநலக் கவனிப்பு போன்ற அடிப்படைத் தேவைகளை நீங்கள் பெற்றுக்கொள்தல்
- உங்கள் சமூகத்தில் பங்காற்றுதல், நடவடிக்கைகளை அறிந்துகொள்ளுதல், பொழுது போக்கு, வேலை, கல்வி போன்றவற்றில் நீங்கள் மகிழ்ச்சியோடு பங்குகொள்தல்
- உங்கள் குடும்பத்துடனும் உதவி புரிவோருடனும் (உங்கள் சம்மதத்துடன்) பணியாற்றுதல்
- நெருக்கடி நிலைமைகளைக் கையாளுதல்
- உங்கள் குறிக்கோள்களை அடைவதற்கான திறன்களைக் கற்றல்
- உங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ள வளங்கள், சேவைகளின் தொடர்பை ஏற்படுத்துதல்

சீஆர்சீரீ 30 வருடங்களுக்கு மேலாக ரொறன்ரோ பகுதியில் இயங்கி வரும் இலாபநோக்கற்ற அறக்கொடை சமூக உளநலத் தொடர்பு நிலையமாகும்.

நாங்கள் உளநல அமைப்பைப் பயன்படுத்தும் 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு உதவியளிக்கிறோம். ஒன்ராறியோ சுகாதார-நெடு நாள் பராமரிப்பு அமைச்சு பிரதான நிதி உதவியை வழங்குகிறது. ரொறன்ரோ பெரும்பாக யுனைட்டட் வே, கனடிய பாரம்பரிய அமைச்சு, ரொறன்ரோ றொட்டரிக் கழகம், ஈஜேஎல்பி பவுண்டேசன், ஒன்ராறியோ ரிறில்லியம் பவுண்டேசன், ரொறன்ரோ நகர சபை- சேவைபெறும் வழி, சமத்துவ நிதியளிப்பு ஆகியவற்றால் துணை உதவி நிதி வழங்கப்படுகின்றது.

### அறக்கொடைப் பதிவு எண்:

#118871128 RR0001

நன்கொடைகளை நன்றியுடன் ஏற்றுக்கொள்வோம்.

மேலதிக தகவவல்களுக்கும் ரொறன்ரோப் பகுதிக்கான உதவிகள், வளங்கள் உளநல சேவைகள் பற்றிய முழுமையான வழிகாட்டிக்கும் www.crct.org இணையத் தளத்தைப் பார்க்கவும்.

Community Resource Connections of Toronto

366 Adelaide Street East, Suite 230 | Toronto, ON M5A 3X9
தொ.பே: (416) 482-4103 | தொ.ந: (416) 482-5237 | crct@crct.org

Community Resource Connections of Toronto

# “கோப்” திட்டம்
# (COPE Program)

COPE

உளநலப் பிறழ்ச்சி பற்றி அக்கறை காட்டுவோம்

## “கோப்” (COPE) சேவைத்திட்டம் என்றால் என்ன?

முதல் தடவையாக உளநலக் குழப்ப அல்லது பிறழ்ச்சி அநுபவத்தைப் பெற்றவர்களுக்கும் அவர்களைப் பராமரிப்பவர்களுக்கும் பண்பாட்டுப் பொருத்தமான தனியாள் முகாமைத்துவத்தைக் “கோப்” என்ற திட்டம் வழங்குகிறது.

### உளநலப் பிறழ்ச்சி என்றால் என்ன?

- மொத்தச் சனத்தொகையில் 3 சதவீதமானவர்களைப் பாதிக்கும் பொதுவான ஒரு மருத்துவ நிலைமை,
- இயல்பான உறவுகளை இழக்க வைக்கக் கூடியதாக மனம் பாதிக்கப்பட்டிருக்கும் நிலை
- இக் குழப்பம் பல்வேறு காரணங்களால் ஏற்படுகின்றது,
- எந்த நேரத்திலும் ஏற்படலாம்
- அதன் ஆரம்ப நிலைகளில் கண்டறியப்பட்டால், இதனை வெற்றிகரமாகக் குணப்படுத்தலாம்
- அதிகமானவர்கள் முழுமையான வாழ்க்கையை நடத்தக் கூடியவர்களாக மனம் பிறழ்ச்சி அடையும் நிலையிலிருந்து குணமடைகிறார்கள்

### உளநலப் பிறழ்ச்சி அறிகுறிகள்

- நண்பர்கள், குடும்பத்தவரிடமிருந்து ஒதுங்குதல்
- தெளிவாகச் சிந்திப்பதிலும் புலன் செலுத்துவதிலும் பிரச்சினைகள்
- வேகமான எண்ண ஓட்டம் அல்லது மிக ஆறுதலாகச் சிந்தித்தல்
- சந்தேகம் அல்லது விடாப்பிடியான எண்ணச் சிக்கல்கள்
- உண்மை அல்லது கற்பனை என்பன பற்றிக் குழப்பமடைதல்
- வித்தியாசமான அல்லது அந்நியமான முறையில் நடத்தல்
- உண்மையற்ற ஒலிகளைக் கேட்டல் அல்லது அங்கே காணப்படாத பொருட்களைக் காணுதல்

## கோப் சேவைத்திட்டத்திற்கு தகுதியானவர்கள் யார்?

- முதன்முறையாக உளநலப் பிறழ்ச்சி ஏற்பட்டவர்கள்
- 15 – 35 ற்கு இடைப்பட்ட வயதினர்
- ஆப்கான் அல்லது தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் (மற்றைய ஆசிய, தென் ஆசிய இனத்தைச் சார்ந்த தனிப்பட்டவர்கள் ஆங்கிலத்தில் மட்டும்தான் சேவையைப் பெறுவர்)
- உளநலப் பிறழ்ச்சிக்குப் பராமரிப்பு ஒருபோதும் பெறாதவர்கள் அல்லது குழப்பம் ஏற்பட்டு ஒருவருடத்திற்குள்ளாகப் பராமரிப்புப் பெற்றவர்கள்.

“கோப்”பின் சேவைகள் ஆகக் கூடுதலாக மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே கிடைக்கும். நீங்கள் சேவையிலிருந்து வெளியேறிய பின்னர் தேவையான ஏனைய சேவைகளுடன் தொடர்பை ஏற்படுத்த உங்களுக்கு உதவுவோம்.

## எங்கள் குறிக்கோள்களும் பெறுமானங்களும்

- உளநலக் குழப்பம் குணப்படுத்தப்படக் கூடியது
- மக்கள் உளநலக் குழப்பத்திலிலிருந்து குணமடையக் கூடியவர்கள்
- நீங்கள் வேலைக்கு அல்லது பாடசாலைக்குச் செல்வதற்கு நாங்கள் நேரத்தோடு தலையிட்டு உங்களுக்குத் துணைபுரிவோம்
- உங்கள் வாழ்வில் குறுக்கீடுகளைக் குறைப்பதற்கு நாங்கள் பணியாற்றுவோம்
- எங்கள் சேவை தொண்டு அடிப்படையிலானதாகும். நாங்கள் உங்கள் சம்மதத்தோடு உங்களோடும் உங்கள் குடும்ப உறுப்பினர்களோடும் மற்ற முக்கியமானவர்களோடும் பங்காளராக இணைந்து பணியாற்றுவோம்
- உங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் என்ன நடைபெறுகின்றது என்பதனை விளங்கிக் கொள்ளவும் உங்களுக்கும் உங்கள் குடும்பம், முக்கியமான மற்றவர்களுக்கும் உதவுவதோடு நீங்களாகவே சுயமாக முடிவெடுக்கவும் உதவுவோம்.
- நீங்கள் வைத்திய பராமரிப்புக்குத் தொடர்பை ஏற்படுத்தவும், ஏனைய சேவைகளைப் பெறவும், ஆதரவு பெறவும் நாங்கள் உதவுவோம்.
- தனியாகவும், செயல்திட்ட மற்றும் எங்கள் நிறுவன மட்டங்களில் உங்களது கருத்தாழமான பங்களிப்பு எங்களுக்குத் தேவையானதும் பெறுமதியானதுமாகும்.

## சமத்துவ சேவை

வீடற்ற நிலைமை, குற்றச்செயல் தொடர்பான சட்டப் பிரச்சினை, இனம், பண்பாடு, இனக்குழுமம், பால்பகுப்பு, மொழி ஆகிய காரணங்களால் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் தடைகளை எதிர்நோக்கும் மக்களுக்கு எங்கள் நிறுவனம் பணியாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது.

## தொடர்பு ஏற்படுத்தக் கோருவது எவ்வாறு?

எவராவது (416) 482-4103 என்ற இலக்கத்தை அழைக்கலாம். முன்னிட்ட செயற்பாடுகள் கொண்ட சேவைத் திட்டம் எனக் கேட்கவும். நாங்கள் உங்களுடன் 48 மணித்தியாலத்திற்குள் தொடர்பு கொள்வோம்.

## அந்தரங்கம் பேணல்

சீஆர்சீரீயில் உள்ள எல்லாப் பணியாளர்கள், மாணவர்கள், தொண்டர்கள் அனைவரும் அந்தரங்கம் காக்கும் சத்தியப்பிரமாணம் ஒன்றில் ஒப்பமிடும்படி வேண்டப்படுவர். உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பிரத்தியேகமாக வைத்திருப்பதோடு சட்டப்படி வேண்டப்பட்டாலன்றி உங்களுடைய சம்மதமின்றி எவருக்கும் வெளியிடமாட்டோம். எங்களின் அந்தரங்கம் காக்கும் கொள்கைகள் பற்றி மேலதிகமாக அறிந்துகொள்ள செயல் திட்ட அந்தரங்கம் காக்கும் பணியாளரை (416) 482-4103 இணைப்பு 232 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

## ஆலோசனைகள்/முறையீடுகள்

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் அல்லது குறிப்பிடத்தக்க பிறருக்கும் மிகச் சிறந்த வாய்ப்பான சேவைகளை (உங்கள் சம்மதத்தோடு) வழங்குவதற்கு எங்களை அர்ப்பணித்துள்ளோம்.

உங்கள் ஆலோசனைகளை எங்களுக்கு அறியத் தரும்படி ஊக்குவிக்கிறோம். எங்கள் சேவைகள் எவற்றிலாவது நிறைவு இல்லை அல்லது முறைப்பாடு செய்யவேண்டுமெனில் நாங்கள் அவற்றைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறோம். நீங்கள் நேரடியாகவே உங்கள் பணியாளருடன் அல்லது திட்ட முகாமையாளருடன் பேசலாம் அல்லது எங்களுக்குக் கடிதம் ஒன்றை எழுதலாம். உங்கள் கருத்துக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம்.

திட்ட முகாமையாளர்களை அணுகுவதற்கு: கிழக்குக் குழு – (416) 482-4103 இணைப்பு. 239. மேற்குக் குழு – (416) 482-4103 இணைப்பு 238..